## சமுர்த்தி பாதுகாப்பு வலையமைப்பின் மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வினை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த பதினெட்டு மாத காலத்திற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த பதினெட்டு மாத காலத்திற்கான விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகை களுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.